# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, UDHAGAMANDALAM

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No. 112/2024**

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS | : | **அ.சா. 13** |
| NAME | : | ராஜுவ் |
| FATHER | : | கோபாலன் |
| ADDRESS | : | மஞ்சூர் |
| DISTRICT | : | நீலகிரி |
| AGE | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**DATED**: **28.07.2026 (சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மஞ்சூரில் வசித்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் மஞ்சூர் மத்திய கூட்டுறவு வங்கியில் ஊழியர்கள். நான் மேற்படி வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருந்தேன். எனக்கு தெரியாமல் மேற்படி வங்கி ஊழியர்கள் சுமார் ரூ-6 லட்சம் வரையிலான தொகைகளை எனது கையெழுத்து மட்டும் உள்ள காசோலைகளை வைத்து கையாடல் செய்துவிட்டனர். எனது காசோலைகள் ஏற்கனவே அ.த.சா.ஆ.194 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக துணைப்பதிவாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தான். அது **அ.த.சா.ஆ.331** . அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது வங்கி கணக்கில் ரூ.6 லட்சம் வரையிலான தொகையை நான் போடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மினி டெபாசிட் கலெக்டர் லட்சுமணன் என்பவரிடம் எனது கையெழுத்து மட்டும் உள்ள காசோலையை கொடுத்திருந்தேன். அவர்தான் நான் வங்கிக்கு செல்லும்போது கவுண்டரில் இருப்பார். பணத்தை வங்கியில் இருந்து பெற்றுக் கொள்வதும் அவர்மூலம்தான். அ.த.சா.ஆ.194ல் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அதில் உள்ள விவரத்தை நான் நிரப்பவில்லை. எனக்கு எதாவது நஷ்டம் ஏற்பட்டதா என்றால் ரூ-30,000/- நஷ்டம் ஏற்பட்டது. அந்த தொகையை மினி டெபாசிட் கலெக்டர் லட்சுமணன் எடுத்துவிட்டார். போலீசாரோ, துணைப் பதிவாளாரோ என்னிடம் மாதிரி கையெழுத்து பெற்றுள்ளார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை**.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து சாட்சிய வாக்குமூலம் பெறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டது.**

MUMMOORTHY.A Digitally signed by MUMMOORTHY.A
Date: 2026.07.28
17:18:30 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**உதகமண்டலம்.**